**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109455

1. District மாவட்டம் : Thiruvallur  PS: காவல்நிலையம் Vigilance & Anti-Corruption Thiruvallur  Year: ஆண்டு 2024  FIR No.: மு.த.அ. எண் 1/AC/2024/TVL  Date: நாள் 30/1/2024 at 11.30hrs.

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act, 1988 as amended in 2018  Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 23/1/2024  Date to : நாள் வரை —
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் at about 1700 hrs.  Time to : நேரம் வரை —
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30/1/2024  Time நேரம் : 09.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30/1/2024  Time நேரம் : 0930 hrs & 11.30 hrs.

Seen
[signature]
30/1/2024

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Oral statement given by the complainant and recorded by me as complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்  West - about 65 kms.
   Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி R.k.pet Sub-Register Office, R.k.pet Taluk, Thiruvallur District

Seen
[signature]
30/1/24

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Jaishankar  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Kuppan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53 years  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Land Business (Incharger)  (g) Address : முகவரி NO: 1/230, Gandhi Street, Mathar village & post, Thiruttani Taluk Thiruvallur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Selva Ramachandran, Sub-Registrar, R.k.pet Sub-Registry R.k.pet Taluk, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - by complainant -

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded Rs. 35,000/- as bribe.

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Submitted:- Today 30/1/2024 at about 09.30hrs, when I was present at Thiruvallur Vigilance & Anti-corruption office, One Th. K. Jaishankar, age-53, S/o. Kuppan, No: 1/230, Gandhi Street, Mathur Village & post, Thiruttani Taluk, Thiruvallur District appeared before me and stated his complaint orally and the same was recorded by me as complaint. It has followed:-

(FIR contents continue to the next page separately ......)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G.S. TAMIZHARASI ... Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS... V&AC, Thiruvallur..........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. ஜெய்சங்கர் 30/1/24

30/1/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம்
பெருவிரல் இரேகைப் பதிவு LTI of K. Jaishankar

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் On 30/1/2024 at about 14.10hrs.

Name: பெயர் [G.S. TAMIZHARASI]
Rank: நிலை INSPECTOR OF POLICE, V&AC, THIRUVALLUR. No. எண்

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.01/AC/2024/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

பலிந்து அனுப்பப்படுகிறது

திரு.K.ஜெய்சங்கர், வயது-53, த/பெ. குப்பன், எண்.1/230, காந்தி தெரு, மத்தூர் கிராமம் & போஸ்ட், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவர் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று 30.01.2024-ந்தேதி காலை சுமார் 09.30 மணிக்கு என் முன் ஆஜராகி கொடுத்த வாக்குமூலம். நான் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தாலுக்காவிற்குட்பட்ட மத்தூர் கிராமத்தில், என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத சரியாக வராது, ஆனால் படிக்கத்தெரியும். மேலும் நான் கடந்த 10 ஆண்டுகளாக நிலம் வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2022-ம் வருடம் ஆர்.கே.பேட்டை தாலுக்காவிற்குட்பட்ட விளக்கணாம்பூடி குரூப், செல்லாத்தூர் கிராமத்தைச்சேர்ந்த திரு.கோபால் அவர்களின் மகன்கள் (1) திரு.ஆஞ்சநேயன், (2) திரு.நரசிம்மன், (3) திருமதி.சம்பூர்ணம், க/பெ. ஆஞ்சநேயன், (4) திரு.ஐயப்பன், த/பெ. ஆஞ்சநேயன் ஆகிய நால்வருக்கும் சொந்தமான இடம் செல்லாத்தூர் கிராம புஞ்சை சர்வே எண்.176/3ஏ-ல் 0.82 சென்டில் 0.70 சென்ட் நிலத்தை (மொத்தம் 22840 சதுரடிகள்) மற்றும் பட்டாவும் அவர்கள் பெயரில் உள்ளது என்றும், அதை அவர்கள் விற்பனை செய்ய உள்ளதாக தெரிந்து, அவர்களிடம் பேசியதில் ஒரு சதுரடி ரூ.560/-என நிர்ணயம் ரூ.25,00,000/-ஐ முன் பணத்தொகையாக கொடுத்து, மீதித்தொகையை சுமார் 6 மாத காலத்திற்குள் செலுத்தி என் பெயருக்கு விக்கிரையப்பத்திரம் செய்துக்கொள்ள வேண்டும் என்று கடந்த 23.04.2022-ந்தேதி 100 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் பதிவு செய்யப்படாத விக்கிரைய அக்கிரிமென்ட் ஒன்றை, சாட்சிகளின் முன்னிலையில் தயார் செய்து அனைவரும் கையொப்பம் செய்தோம். ஆனால், எனக்கு பணம் தருவதாக கூறிய இடத்திலிருந்து பணம் தராததால், நிலத்தின் உரிமையாளர்களிடம் பணம் குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்காமல் போகவே, அவர்களிடம் நான் கொடுத்த பணம் ரூ.25,00,000/-ஐ திரும்ப கேட்டபோது, அவர்கள் பணத்தை செலவு செய்து விட்டோம் என்றும், மேற்படி இடத்திற்கு பொறுப்பாளராக இருந்து, அப்ரூவல் வாங்கி மனை பிரித்து, பார்ட்டிகளை பிடித்து நிலத்தை விற்றுக்கொடு என்றும், அதற்காக வரும் விற்பனைத்தொகையில் தரவேண்டிய பணம் போக, கமிஷன் தொகையையும் பெற்றுக்கொள்ளுமாறு கூறினர். அதனால் மேற்குறிப்பிட்ட நிலத்திற்கான அப்ரூவல் பெற்று அனைத்து வேலைகளையும் நானே முன்னின்று செய்து “ஆஞ்சி நகர்” என்ற பெயரில் மனைகளாகப்பிரிக்கப்பட்டது. மேற்படி நிலத்தினை ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் வட்டம், மலையம்பேடு கிராமத்தைச்சேர்ந்த திரு.P.நரசிம்மன், த/பெ. பெரியசாமி என்பவர் மேற்படி ஆஞ்சி

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.01/AC/2024/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

நகரில் மனை எண்.2-ல் அடங்கிய 759 சதுரடி கொண்ட காலிமனையை ரூ.75,900/-ற்கு நான் உடனிருந்து பேசிமுடித்து, கடந்த 22.01.2024-ந்தேதி ஆர்.கே.பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் நிலத்தின் உரிமையாளர் திரு.A.ஐயப்பன், த/பெ. ஆஞ்சநேயன் என்பவரால் பத்திரப்பதிவு செய்யப்பட்டது. ஆனால் அந்த விக்கிரய ஆவணம், ஆவண எண்.P/R.K.Pet/19/2024 (ரசீது எண்.224/2024)-ல் கைடுலைன் மதிப்பு நிர்ணயம் செய்ய நிலுவையில் வைக்கப்பட்டது. மேற்படி நிலத்தை நான் முன்னின்று விற்பனை செய்து, பத்திரப்பதிவு செய்ததாலும் நிலத்தினை விற்ற திரு.ஐயப்பன் மற்றும் நிலத்தை வாங்கிய நரசிம்மன் ஆகிய இருவருமே, மேற்படி விக்கிரய பத்திரத்தை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டதால், கடந்த 23.01.2024-ந்தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு ஆர்.கே.பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சார்பதிவாளர் திரு. செல்வ ராமச்சந்திரன் அவர்களை சந்தித்து, நிலுவையில் வைத்திருந்த பத்திரம் சம்மந்தமாக விசாரித்தேன். அப்போது சார்பதிவாளர் திரு.செல்வ ராமச்சந்திரன் அவர்கள் மேற்படி ஆஞ்சி நகர் மனைப்பிரிவிற்கு வழிகாட்டி மதிப்பினை நிர்ணயம் செய்யவேண்டும் என்றும், அதை நான் செய்ய முடியாது, திருவள்ளூர் மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு அனுப்பித்தான் கைடுலைன் மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என்று தெரிவித்தார். அதனால் நான் திருவள்ளூர் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பி கைடுலைன் மதிப்பினை பெற்றுத்தருமாறு கேட்டேன். அதற்கு அவர் நான்தான் அந்த பைலை தயார் செய்து, மாவட்ட பதிவாளருக்கு அனுப்ப வேண்டும் என்றும், அதற்கு பணம் ரூ.50,000/-ம் செலவாகும் என்றும் தெரிவித்தார். நான்தான் அந்த மனைகளின் விற்பனை சம்மந்தமான வேலைகளை பார்த்துவருகிறேன் என்றும், அவ்வளவு பணம் என்னால் தரமுடியாது என்று தெரிவித்தேன். அதற்கு ஆர்.கே.பேட்டை சார்பதிவாளர் திரு.செல்வ ராமச்சந்திரன் அவர்கள் அவர் கேட்ட லஞ்சப்பணத்திலிருந்து குறைத்து, பணம் ரூ.35,000/-ம் கொடுத்தால்தான் பைலை தயார் செய்து, திருவள்ளூர் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பி வழிகாட்டி மதிப்பினை பெற்றுத்தருவேன், இல்லாவிட்டால் பைலை நிலுவையில் வைத்துவிடுவேன் என்று தெரிவித்தார். நான் அங்கிருந்து வந்து, நில உரிமையாளர்களிடமும், நிலத்தை வாங்கியவர்களிடமும் சார்பதிவாளர் கைடுலைன் மதிப்பினை நிர்ணயம் செய்ய திருவள்ளூர் மாவட்ட பதிவாளருக்கு பைலை அனுப்ப வேண்டும் என்றால் லஞ்சமாக அவருக்கு பணம் ரூ.35,000/-ம் கொடுக்க வேண்டும் என்றும், அப்படி கொடுக்கவில்லையென்றால், பைலை அனுப்பாமல் நிலுவையில் வைத்துவிடுவதாக கூறியதை தெரிவித்தேன். அதற்கு அவர்கள் எல்லாப்பணமும் கட்டிபிறகு ஏன் லஞ்சமாக பணம் கொடுக்கவேண்டும். அதனால் ஆர்.கே.பேட்டை சார்பதிவாளர் திரு.செல்வ ராமச்சந்திரன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து கிரைய ஆவணத்தை பெற ஏற்பாடு

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.01/AC/2024/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

செய்யுமாறு கூறினார்கள். அதனால், எங்களுக்கு ஆர்.கே.பேட்டை சார்பதிவாளர் திரு.செல்வ ராமச்சந்திரன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால், அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.35,000/-ஐ ரெடி பண்ணிக்கொண்டு, இன்று 30.01.2024-ந்தேதி காலை சுமார் 09.30 மணியளவில் திருவள்ளூர் லஞ்சஒழிப்புத்துறை அலுவலகத்திற்கு வந்து, திரு.செல்வ ராமச்சந்திரன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க, தங்களிடம் வாய்மொழியாக புகார் தெரிவித்தேன். மேலும், சார்பதிவாளர் கேட்ட லஞ்சப்பணத்தை ரெடி பண்ணவும், அரசு விடுமுறை நாட்கள் தொடர்ந்து வந்ததாலும் காலதாமதம் ஆகிவிட்டது. எனவே, தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனக்கு சரியாக தமிழ் எழுத வராது என்பதால், நான் சொல்ல சொல்ல காவல் ஆய்வாளர் தமிழரசி ஆகிய தாங்களே கம்ப்யூட்டரில் ஒரு புகாராக டைப் செய்து, பிரிண்ட் எடுத்து என்னிடம் கொடுத்ததை, நான் படித்துப்பார்த்தேன். நான் சொன்னபடி சரியாக இருந்தது. அதனால் இந்த புகாரில் எனது கையொப்பத்தை போட்டு, எனது இடதுகை பெருவிரல் ரேகையையும் வைத்தேன். SdXXX K.Jaishankar & LTI of complainant. 30.01.2024.

**Sir, The oral statement of the complainant was reduced into as a typed complaint, recorded by me. SdXXX(G.S.Tamizharasi), Inspector of Police, V&AC, Thiruvallur.** 30.01.2024.

**Honoured Sir,**

I ~~received~~ recorded the above complaint on 30.01.2024 at about 09.30 hrs and after getting proper permission from DVAC on this complaint, preliminary enquiry is conducted in a discreet manner. Based on the outcome of the enquiry, the antecedents of the accused, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register a FIR on said complaint. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.1/AC/2024/TVL u/s. 7 of The Prevention of Corruption Act-1988 (as amended in 2018) against the accused Tr.Selva Ramachandran, Sub-Registrar, R.K.Pet Sub-Registry, Thiruvallur District on today 30.01.2024 at about 11.30 hrs and took-up action.

**(SdXXXG.S.TAMIZHARASI),**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.

The original complaint and FIR are sent to the court of Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and the other copies to the concern officers of DVAC on 30.01.2024.

30/1/2024

**INSPECTOR OF POLICE**
**VIGILANCE & ANTI CORRUPTION**
**Thiruvallur - 602 001.**